ஆண்டு சந்தா ரூ. 60/-

# அன்பு பகிர்வு இயக்கம்

மலர் : 7 இதழ் : 6 ஏப்ரல் – 2011

செய்திமலர்



# என் மீட்பர் (இயேசு) உயிரோடிருக்கிறார்


யோபு 19:25

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

*சுதேச ஊழியர் சாட்சி*

# Rev. ராமு ஹட்டிலா

### குஜராத்




இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள் ! என்னுடைய பெயர் ராமு ஹட்டிலா. நான் குஜராத் மாநிலத்தில் தாகோத் மாவட்டத்திலுள்ள ரீசும்புரா என்ற கிராமத்தைச் சேர்ந்த ஓர் பீல் ஆதிவாசி. அந்நிய தேவதைகளை வணங்கி வந்தேன். பல விதமான பாவங்களுக்கு அடிமைப்பட்டு மிகவும் மோசமான வாழ்க்கை வாழ்ந்து வந்தேன். பீடி, தம்பாக்கு, சாராயம் குடிப்பது போன்ற பழக்கங்கள் என்னிடத்தில் இருந்தன. உலகத்தைக் குறித்த அறிவு சிறிதும் எனக்கு இல்லாதிருந்தது. எங்கள் கிராமத்து மக்களைப் போலவே நானும் மந்திரவாதிகளையே தெய்வமாக நினைத்து மதித்து வந்தேன்.

இந்த நிலையில் நான் அதிகமாக வியாதிப்பட்டேன். தினமும் காய்ச்சலால் வேதனைப்பட்டேன். எனக்கு விடுதலை கிடைக்க மந்திரவாதிகளிடம் அதிக பொருள்கள் கொடுத்து மந்திர கிரியைகள் செய்தோம். மேலும் மருத்துவமனைக்குச் சென்று ரூ. 15,000/– வரை செலவு செய்து மருத்துவம் பார்த்தோம். ஆனாலும் எந்தவிதத்திலும் விடுதலை கிடைக்கவில்லை. மிகவும் சோர்ந்து போன நிலையில் இருந்தபோது, எனது சகோதரியின் மூலமாக இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு, வாங்கோல் கிராமத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அங்கு ஊழியம் செய்து வந்த Rev. கன்னுபாய் பாபோர் இயேசுவைக் குறித்து அதிகமாக எனக்குக் கூறி எனக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். அந்த நாளிலே தேவன் எனக்கு அற்புத சுகத்தைக் கொடுத்தார். அதன் பின்பு உண்மையான தெய்வத்தை எனது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தொடர்ந்து ஆலயத்திற்குச் சென்று வேத அறிவிலும் வளர்ந்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டேன்.

அதன் பின் எனது சொந்த ஜனங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன் எனக்கு பாரத்தைக் கொடுத்ததின் விளைவாக, நான் ஊழியத்திற்கென்று என்னை அர்ப்பணித்து, ஷாலோமில் இணைந்து எனது சொந்த கிராமத்தில், ஊழியம் செய்து வருகிறேன். எனது வீட்டில் ஞாயிறு தோறும் ஆராதனை நடத்தி வருகிறேன். தொடர்ந்து எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும், நான் செய்து வரும் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள் !

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Mrs. Selvi Pandian, Bangalore**.

## உங்கள் சகோதரனிடமிருந்து....



***கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!***

**“உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்”!** கடந்த மூன்று மாதங்களும் தேவன் நம்மை நடத்தி வந்துள்ளார். மட்டுமல்லாமல் கடந்த நிதியாண்டு (2010–2011) முழுவதிலும் தேவன் போதுமானவராக இருந்து ஊழியத்தின் தேவைகளை அற்புதமாக சந்தித்து வருகிறார். உங்களுடைய ஜெபம் மற்றும் ஆதரவிற்காக தேவனைத் துதிக்கின்றேன். உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய நிதியாண்டில் (2011–2012) ஊழியத் தேவைகளை தேவன் சந்திக்கும்படியாக மறவாமல் ஜெபியுங்கள்.

ஊழியங்கள் வளர வளர தேவைகளும் அதிகமாகிக் கொண்டு போவதை அறிவீர்கள். ஆகையால் உங்கள் உறவினர்கள், தெரிந்த நபர்கள் குறைந்தது இரண்டு பேர்களிடமாவது நமது ஷாலோம் ஊழியங்களை அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறேன். நமது ஷாலோம் ஊழியங்களில் ஒரு முறை ரூ. 1000/– கொடுத்து ஆயுள்கால அங்கத்தினராக இணையக் கூடிய 1000 ஆதரவாளர்கள் தேவை. இதுவரையில் 130 பேர் மட்டுமே இணைந்துள்ளனர்.

கடந்த மாதத்தில் ஊழியர்கள் கூட்டங்கள், மூப்பர் மனைவிமார் கூட்டங்கள், மருத்துவ முகாம்கள், ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம்கள், தேர்வு எழுதுகிற பீல் ஆதிவாசி மாணவர்களுக்கான சிறப்பு ஜெபங்கள் ஆகியன மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

நான் சென்னையிலிருந்து நம் ஆதரவாளர்களையும், போதகர்களையும் சந்திக்க தேவன் கிருபை செய்தார். மேலும் சுவிசேஷகர்கள் கூடுகையிலும், போதகர்களுக்கான கூடுகைகளிலும் பங்கு பெற்று நம் ஊழியங்களை அறிமுகப்படுத்த தேவன் கிருபை செய்தார்.

வருகின்ற ஏப்ரல் – மே மாதங்களில் பணித்தளத்தில் நடைபெறவுள்ள CBC –ல் (Children Bible Class) குறைந்த 30000 சிறுவர்கள் பங்கு பெற்று ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இதற்கான ஆசிரியர் பயிற்சி, புத்தகங்கள், CD-க்கள் எல்லாவற்றிற்கும் குறைந்தது **ரூபாய் மூன்று இலட்சங்கள்** தேவைப்படுகிறது. தேவைகள் சந்திக்கப்படவும், சிறுவர்கள் தவறாமல் பங்கு பெற்று ஆசீர்வதிக்கப்படவும் மறவாமல் ஜெபியுங்கள்.

இந்த லெந்து நாட்களில் நமக்காக இரத்தம் சிந்தி நம்மை மீட்டுக் கொண்ட இயேசு கிறிஸ்துவின் அன்பு நம்மையும் நம் குடும்பத்தையும் நிரப்புவதாக! உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு நாம் சாட்களாக விளங்குவோமாக!

*நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்.* லூக்கா 24:48

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(Rt.Rev.Dr.V. தேவதாஸ்)

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

# தாம் சொன்னபடியே இயேசு உயிர்த்தெழுந்தார்

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

***மரித்து உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.*** இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகையை உலகமெங்கும் திருச்சபைகள் சந்தோஷமாக கொண்டாடுவதைக் காட்டிலும் மிக அதிகமான சந்தோஷத்துடன் கொண்டாட வேண்டிய பண்டிகை ஈஸ்டர் திருநாளாகும். ஏனெனில் உலகத்தின் பாவத்தை சுமந்துத் தீர்த்த தேவ ஆட்டுக்குட்டியாம் இயேசு கிறிஸ்து மரித்து மூன்றாம் நாள் தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். ஆகையால் நமக்கு உண்டான பாக்கியங்கள் என்ன? என்பதை வேதத்தில் ஆராய்வோம்.

**<u>1. உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை நமக்கு தந்த இயேசு</u>**

வேதம் சொல்லுகிறது **"இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று"** விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டு வருவார். (1தெச. 4:14) இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பாவத்தை அறிக்கை செய்து அதை விட்டுவிட்டு பாவமன்னிப்பைப் பெற்றவர்கள் கல்வாரி ரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள், இரட்சிப்பு என்னும் புது வாழ்வு பெற்றவர்கள் அவர்கள் மரித்தாலும் இயேசு கிறிஸ்துவுக்குள் மறுபடியும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். உயிரோடு இருப்பவர்களும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போகப்படுவோம். இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். இந்த நம்பிக்கை கிறிஸ்தவனாக பிறந்ததினால் கிடைப்பதல்ல. வேதம் சொல்லுகிறது, ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். (ரோமர் 6:5.)

அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்படவேண்டும். அதாவது நம்மை பாவத்திற்கு மரித்தவர்களாகவும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள். நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிட்டு, பாவத்திற்கு செத்தவர்களாய் ஒப்புக்கொடுக்கும்போது உயிர்த்தெழுதலின் பாக்கியத்திற்கு தேவன் நம்மைத் தகுதிப்படுத்துவார். அவர் வருகையில் நாமும் எடுத்துக்கொள்ளப்படுவோம். இயேசு உயிர்த்தெழுந்தார், நமக்கும் அந்த பாக்கியத்தை அவர் மரணத்தின் மூலமாக தந்துள்ளார். அல்லேலூயா!

**<u>1. பாவத்திலிருந்து விடுவிக்க உயிர்த்தெழுந்த இயேசு :–</u>**

உயிர்த்தெழுந்த இயேசு அப்போஸ்தலருக்கும், தம் சீஷர்களுக்கும் தம்மை

வெளிப்படுத்தினார். இயேசுவின் சீஷர்கள் அவர் மரணத்திற்குப் பின்பு மிகவும் பயந்திருந்தார்கள். **“வாரத்தின் முதல்நாளாகிய அன்றைய தினம் சாயாங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம்”** என்றார். (யோவான் 20:19.) மேலும் 26–ம் வசனத்தில் மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். வசனங்களைப் பார்க்கும்போது சீஷர்கள் யூதர்களுக்குப் பயந்திருந்தனர். அவர்களுக்கு மனிதர்களை குறித்த பயம் மற்றும் அதிகாரங்களைக் குறித்த பயம், மேலும் தங்களையும் இயேசுவைப் போல் கொன்றுவிடுவார்களோ என்ற மரணபயம் ஆட்கொண்டிருந்தது. ஆகவே பூட்டிய கதவுகள் மத்தியில் உயிர்த்தெழுந்த இயேசு உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக என்று பயங்களை நீக்கி சமாதானம் கொடுத்தார். தோமாவுக்கு உண்டான சந்தேகத்தை தன்னுடைய விலாவில் கைகளைப்போட்டு காயங்களைத் தொட்டு பார்த்து உயிர்த்தெழுந்த இயேசுவை விசுவாசிக்க வைத்தார். அவர்கள் மீது ஊதி பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுங்கள் என்று உன்னத பெலனையும் கொடுத்தார். அவர்களுக்குள் இருந்த மனிதபயம், அதிகாரங்களின் மீதான பயம், மரணபயம், எதிர்காலத்தைக் குறித்த பயம் எல்லாவற்றையும் நீக்கி புதிய நம்பிக்கையைக் கொடுத்து **“உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்”** என்றார். (மத்தேயு 28:20.)

**3. உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை நமக்கு தந்த இயேசு**

மிகவும் பயந்து கலக்கத்தோடு இருந்த அப்போஸ்தலர்கள் மற்றும் சீஷர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலை கண்ணாரக் கண்ட பின்பு, அவர்களுக்குள் இருந்த மரணபயம், மனிதர்களைக் குறித்த பயம் எல்லாம் நீங்கியது. பேதுரு ஒரு வேலைக்காரியிடம் இயேசுவை மறுதலித்தார். ஆனால் உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்த பின்பு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவர் இயேசுவே என்று பலத்த சாட்சிக் கொடுத்தார். தன்னுடைய எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று கலங்கி தான் மட்டும் அல்லாமல், மற்றவர்களையும் மீன்பிடிக்க அழைத்துச் சென்றான் சீமோன் பேதுரு. அவன் மற்றவர்களை நோக்கி: **மீன்பிடிக்கப் போகிறேன்** என்றான். அதற்கு அவர்கள் நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப்போய், உடனே படவேறினார்கள். அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. (யோவான் 21:3) ஆனால் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து திபேரியா கடற்கரையில் தன்னை வெளிப்படுத்தி என்னை நேசிக்கிறாயா? என்று பேதுருவோடு தன் இதய பாரத்தை

வெளிப்படுத்தினார். உயிர்த்தெழுந்த இயேசுவை நேசிக்க ஒப்புக்கொடுத்த பேதுரு எல்லா சீஷர்களையும், ஒருங்கிணைத்து ஜெபத்திலே தரித்திருந்தார் என்று வேதத்தில் வாசிக்கிறோம். அந்நாட்களில் சீஷர்களில் ஏறக்குறை நூற்றிருபதுபேர் கூடியிருந்தபோது, அவர்கள் நடுவிலே பேதுரு எழுந்து நின்று..... (அப். 1:15) ஆவிக்குரிய வழிகாட்டும் தலைவனாக உறுதியாக நின்றார்.

இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்களாயிருக்கிறோம். (அப். 2:32)

ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். (அப். 3:15)

“உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும் இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது”. (அப். 4:10)

“கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிக்கொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது”. (அப். 4:33)

தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். (அப். 5:42)


“சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்”. (அப். 8:4)

ஆதி அப்போஸ்தலர் சபையில் சீஷர்களும், திருச்சபை விசுவாசிகளும், உயிர்த்தெழுந்த இயேசுவை ஆண்டவர் என்று சாட்சி கொடுத்தார். இயேசுவின் நாமத்திற்காக தாங்கள் அவமானம் அடைவதற்கு பாத்திரவான்களாக எண்ணினார்கள். நாம் உயிர்த்தெழுந்த இயேசுவை சபையில் கொண்டாடுவது மட்டுமல்லாமல், நம்முடைய தேசத்தில் ஒவ்வொரு ஜாதி மக்களுக்கும் சாட்சியாய் அறிவிப்போம். எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது;

அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது.

***நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் - இயேசு***

# நினைவுப்படுத்துகிறோம்......



அன்பான உண்டியல் ஆதரவாளர்களே !

இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O, D.D, Cheque** மூலமாக **Sharing Love Mission** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதை திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468 –** இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

## FORM IV

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Thoothukudi |
| 2. | Periodicity of it's Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | S. Joseph |
| 4. | Address | : | Rajan Press<br>59, Palayamkottai Road,<br>Thoothukudi - 628 002. |
| 5. | Whether the Citizen of India | : | Yes |
| 6. | Publisher's Name | : | V. Devadoss |
| 7. | Address | : | 5/168, Caldwell Colony,<br>3rd, Street,<br>Thoothukudi - 628 008. |
| 8. | Editor's Name | : | V. Devadoss |
| 9. | Address | : | As above |

I V. Devadoss, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date : 30.03.2011

signature of Publisher

## உங்கள் கவனத்திற்கு....

தேவனுடைய பெரிதான கிருபையினால் நமது ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்களை தேவன் ஜெபக்கூடுகைகள், வீட்டு ஜெபக் கூடுகைகள், ஞாயிறு ஆராதனைகள், மிஷனெரி தரிசன கூடுகைகள், மற்றும் உபவாச ஜெபங்களில் அநேக இடங்களில் பயன்படுத்தி வருகிறார்.

நீங்களும் உங்களது ஜெபக்கூடுகைகள், வீட்டு கூடுகைகள், உபவாச கூடுகைகள் மற்றும் ஞாயிறு ஆராதனைகள், சுவிசேஷக் கூட்டங்கள், நற்செய்திக் கூட்டங்கள், மிஷனெரி தரிசனக் கூடுகைகள் ஆகியவற்றில் ஷாலோம் ஊழியர்களைப் பயன்படுத்த விரும்பினால் எங்களோடு தொடர்பு கொள்ள அன்பாய் கேட்கிறோம்.

தொடர்புக்கு : சகோ. ரத்தீஸ் குமார், செல் : ***செல் : 9600695598***

## உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்...

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தாலோ, மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் உங்களது முகவரியில் திருத்தங்கள், மாற்றங்கள் அல்லது புது முகவரியை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாக தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும். மேலும் உங்களது தொலைபேசி எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

### ஷாலோம் மார்த்தாண்டம் கிளை அலுவலகம்


***Bro. G. Selvadurai***

Kalikal House, Near A.G.Church
Gnaramvilai, Pacode.P.O K.K Dist, Tamil Nadu 629168

Cell : 94876-89869

சென்னையில் தொடர்பு கொள்ள...

| ***Bro. B. Ebenezer Daniel*** | ***Bro. D. Diaz Bose*** |
|---|---|
| New no:38 Old No:76A, 2nd Floor,<br>3rd St, Gill Nagar,<br>Choolaimedu, Chennai,<br>Tamil Nadu 600 094 | No.16F 1, M.R.J. Apartments<br>Andavar Nagar, 5th Street<br>Kodambakkam, Chennai,<br>Tamil Nadu 600 024 |
| Cell : 934 44-75468 | Cell : 90427-80315 |

*சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். யோவேல் 2 : 15*

# ஷாலோம் உபவாச ஜெபம்

நாள்

**02.04.2011**
**சனிக்கிழமை**

நேரம்

**காலை 9.30 மணி முதல்**
**மதியம் 1.00 மணி வரை**

இடம்

**ஷாலோம் தலைமை அலுவலகம்,**
**5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8.**



தேவ செய்தி :

## Rt. Rev. Dr. A. ஸ்டீபன்

(பெந்தேகொஸ்தே திருமண்டல தூத்துக்குடி மாவட்ட தலைவர்)

***தேசத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும்,***
***குடும்பங்களுக்காகவும் ஜெபிக்க உபவாசத்துடன் குடும்பமாக***
***அனைவரும் கலந்து கொண்டு ஜெபிக்க***
***அன்பாய் அழைக்கிறோம்.***

***உங்களது ஜெபக்குறிப்புகளுக்காக விசேஷமாக ஜெபிக்கப்படும்!***

குறிப்பு : ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை தோறும் இந்த உபவாச ஜெபம் நடைபெறும்.

தொடர்பு :

**அன்பு பகிர்வு இயக்கம்,**
**5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8.**
**போன் : 0461 – 2375468, செல் : 9345675468**

# பீல் ஆதிவாசி மாணவர் கல்வி திட்டம்

தேவ கிருபையினால் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசிகள் மத்தியில் குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் மாநிலங்களில் கடந்த 19 ஆண்டுகளில் சுமார் 600க்கும் அதிகமான கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து சபைகளை ஸ்தாபிக்க தேவன் கிருபை செய்துள்ளார். அந்தகாரத்திலும், குடிப்பழக்கத்திலும் பாவப் பிடியிலும் வாழ்ந்து கொண்டிருந்த சுமார் 20,000க்கும் அதிகமான குடும்பத்தார் இயேசு கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றுள்ளார்கள். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

இப்பொழுது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பாவம், சாபம், பிசாசு இவைகளிலிருந்து விடுதலைபெற்ற விசுவாசக் குடும்பங்கள் தங்கள் பிள்ளைகள் தங்களைப் போல் வாழக்கூடாது, தங்கள் பிள்ளைகள் படித்து சாட்சியுடன் வாழ வேண்டும் என்று வாஞ்சையுடன் எதிர்நோக்கி இருக்கிறார்கள். ஆகவே நாங்கள் இந்த தேவைகளை கண்டறிந்தவர்களாய் பாரத்துடன் ஒவ்வொரு வருடமும் கல்வியறிவு பணிக்காக நம்மால் முடிந்த உதவிகளை செய்து வருகிறோம்.

கடந்த இரு நூற்றாண்டுகளில் மேல்நாட்டு மிஷனெரிமார்கள் நமக்கு சுவிசேஷ ஒளியைத் தந்து ஆண்டவரண்டை நடத்தி அழகுமிகு ஆலயங்களைக் கட்டிக் கொடுத்தார்கள். இன்று தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் பல நகரங்களில் அன்று மிஷனெரிமார்களால் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ கல்வி நிலையங்கள் மூலமாக மூன்று நான்கு தலை முறையாக நாம் கல்வியறிவைப் பெற்று வருகிறோம். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு ஜாதி சமயத்தினரும் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசீர்வாதமாக இன்றும் அமைந்து வருகிறது. இது நாம் மறுக்க முடியாத உண்மை. இன்றைக்கு கிறிஸ்துவின் அன்பையும், கல்வியறிவையும் பெற்ற நாம் கல்வியறிவில்லாதவர்களுடைய கண்களைத் திறக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். தேவன் இந்த பீல் மக்களை தெரிந்தெடுத்து அற்புத அடையாளங்களோடு சுதேச ஊழியர்களை தெரிந்தெடுத்து கிராமங்கள் தோறும் சபைகளை தேவன் உருவாக்கி வருகிறார்.

குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் நமது ஷாலோம் விடுதிகளில் தங்கிப் படித்து வரும் மொத்த மாணவ மாணவியர் 808 பேர். இதில் 565 சிறுவர்களுக்கு ஆதரவாளர்கள் உள்ளனர். மீதமுள்ள **243 மாணவ மாணவியருக்கு மாதந்தோறும் ரூ. 500/- கொடுத்து ஜெபித்துத் தாங்கக் கூடிய ஆதரவாளர்கள் தேவை.** உங்கள் உள்ளங்களில் தேவன் ஏவினால் இந்த மாணவர்களைத் தாங்க முன் வாருங்கள்.

ஆகவே கீழ்க்காணும் திட்டங்களை ஆவியானவருடைய ஒத்தாசையோடு நிறைவேற்ற பிரயாசப்படுகிறோம்.

✞ தாகோத் (குஜராத்), பான்ஸ்வாடா (இராஜஸ்தான்), ஜாபுவா (மத்தியபிரதேசம்) ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 2015–ஆம் ஆண்டுக்குள் 10 பள்ளிக்கூடங்கள் கட்டி எழுப்பவேண்டும்.

- ✞ 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களை பராமரிக்கக்கூடிய 100 ஆதிவாசி மாணவர்கள் விடுதிகளை மூன்று மாநிலங்களிலும் எழுப்ப வேண்டும்.
- ✞ 12–ம் வகுப்பு முடித்துவிட்டு உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி படிக்க முன்வரும் விசுவாசி பிள்ளைகளை முழுமையாக நிதி உதவி கொடுத்து, ஆலோசனைகள் மற்றும் பயிற்சி கொடுத்து தாங்க வேண்டும்.
- ✞ இதன் மூலமாக 10 வருடங்களில் இந்த மூன்று ஆதிவாசிகள் நிறைந்த இந்த மாவட்டங்களிலும் குறைந்தது 1000 ஆதிவாசி இளைஞர்கள் தங்கள் சமுதாயத்தில் சிறந்த தலைவர்களாக, அதிகாரிகளாக தொண்டு செய்து தங்கள் மாவட்டங்களை முன்னேற்ற வழி செய்பவர்களாக மாறுவார்கள் என்பது எங்கள் பாரமும் தரிசனமுமாகும்.
- ✞ பீல் ஆதிவாசி சிறுவர்கள் கல்வியறிவு பெற்று நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.
- ✞ ஒரு பீல் ஆதிவாசி மாணவரை மாதந்தோறும் ரூ. 500/– கொடுத்து ஜெபித்து தாங்கக்கூடிய 300 புதிய ஆதரவாளர்களை எழுப்ப வேண்டும்.

## 2011ம் கல்வியாண்டின் தேவைகள்

இந்த 2011ம் ஆண்டு ஜுன் மாதத்தில் மேற்கண்ட மாணவர்களின் பள்ளிக்கான கட்டணம் (School Fees, Dresses, Note Books) வாங்குவதற்கு ஒரு மாணவனுக்கு ரூ. 500/– வீதம் 808 மாணவர்களுக்கு **ரூ. 4,04,000/–** தேவைப்படுகிறது. உங்கள் குடும்பத்தின் சார்பில் அல்லது சபை, ஜெபக்குழு மூலமாக ஒரு சில மாணவர்களுக்காவது கல்வி உதவி செய்ய முன் வாருங்கள்.

**“மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்.”** (மத்தேயு 25:40) இந்த வசனத்தின்படி பீல் ஆதிவாசி மாணவர்களுக்காக நீங்கள் தியாகத்தோடு கொடுக்கும் நிதி உதவிகளை ஆண்டவர் ஏற்றுக் கொண்டு **“உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்”** (ஏசாயா 53:13) என்ற வசனத்தின்படி கர்த்தர் உங்கள் சந்ததிகளை ஆசீர்வதிப்பாராக. காணிக்கை அனுப்பும்போது உங்கள் பிள்ளைகளுக்கான ஜெபக்குறிப்புகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்களும், ஊழியர்களும் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்கிறோம்.



# SHALOM CHARITY MISSION
## ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 19 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **"கல்வி அறிவு வளர்ச்சி"** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக **Shalom Charity Mission** – என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission** – மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாகத் திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும்.

Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission** – என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

***மேலும் குழந்தை ஆதரவுத் தொகை*** அனுப்புவோர் **Shalom Charity Mission** – என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

# ஜெபிக்க வேண்டுகிறோம்...



- குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் வசிக்கும் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி ஜனங்கள் அனைவரும், நமது தலைமுறையில் இரட்சிக்கப்பட்டு தேவனண்டையில் திரும்ப ஜெபியுங்கள்.
- **Rt. Rev. Dr. V. Devadass, Sis. Vahitha Devadass** மற்றும் பிள்ளைகள் **Gladson Titus** **(MBA II Year)** **Brighton Shalom** **(B.Tech Media Final Year)** **Joy Shekinah** **(Doing M.B.B.S.,)** இவர்களுக்காக ஜெபியுங்கள்.
- வருகின்ற மே மாதம் நமது பணித்தளங்களில் வழக்கம்போல் நமது பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு CBC (Children Bible Class) நடத்த ஜெபித்து தீர்மானித்துள்ளோம். இதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதை தேவன் ஆசீர்வதிக்கவும், அநேக சிறுவர்கள் பங்கு பெற்று ஆசீர்வாதங்களைப் பெறவும், ஜெபியுங்கள்.
- நமது ஷாலோம் தலைமை அலுவலகத்தில் வைத்து ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை தோறும் உபவாச ஜெபம் நடத்தப்பட்டு வருகிறது. இதில் அநேகர் பங்கு பெறவும், இந்த ஜெபம் ஊழியங்களுக்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமாக அமையவும் ஜெபியுங்கள்.
- மார்த்தாண்டத்தில் நமது ஷாலோம் கிளை அலுவலகத்தில் வைத்து மாதந்தோறும் இரண்டாம் சனி தோறும் நடைபெற்று வரும் ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகையை தேவன் ஆசீர்வதிக்கவும், இன்னும் அதிகமாக தேவ பிள்ளைகள் பங்குபெறவும், இந்த கூடுகையின் மூலம் அநேகர் மிஷனெரி தரிசனம் பெறவும் ஜெபியுங்கள்.
- தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியங்களையும், ஊழியர்களையும் தேவன் ஆசீர்வதிக்கவும், குஜராத் பணித்தள அலுவலக ஊழியங்களையும், ஊழியர்களையும் தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.
- நமது பணித்தளங்களிலுள்ள கல்வியறிவு இல்லாத முதியோர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள முதியோர் கல்வித்திட்டம் வெற்றியடையவும், அநேகர் கல்வியறிவு பெற்று, இதன் மூலம் வேத அறிவை பெறவும் ஜெபியுங்கள்.

## நிதியாண்டின் நிறைவு

கடந்த 2010 – 2011ம் நிதியாண்டினை தேவன் அற்புதமாக நிறைவு செய்து தந்தார். தேவைகள் அனைத்தையும் சந்தித்தார். மேலும் இந்த 2011–2012ம் நிதியாண்டினை தேவன் ஆசீர்வதிக்கவும், தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# பீல் ஆதிவாசி மக்களுக்கான முதியோர் கல்வித் திட்டம்

எங்களுக்கும் கல்வி கிடைக்காதா? என்ற பீல் மக்களின் ஆதங்கத்திற்கும் ஜெபத்திற்கும் தேவன் மார்ச் 12ம் தேதி பதில் கொடுத்துள்ளார்.

நமது ஷாலோம் ஊழியங்களும் **"சேவா பாரத்"** இயக்கமும் இணைந்து இந்த திட்டத்தை செயல்படுத்துகிறோம். இந்தத் திட்டத்தின் துவக்கமாக மார்ச் 12ம் தேதி துவக்க விழா நடைபெற்றது. இதில் சகோ. கார்த்திகேயன் (M.P. Administrator) அவர்கள் இந்தக் கூடுகையின் ஆசீர்வாதத்திற்காகவும், கல்வியில் முன்னேற்றம் ஏற்படவும் ஜெபித்து ஆரம்பித்தார்கள். வெளியில் வெயிலின் கொடூரம் இருந்தாலும், தனது இனிய வரவேற்பு வார்த்தைகளால் வந்திருந்த அனைவரையும், குளிர வைத்தார்கள். சேவா பாரத்தில் பணிபுரியும் சகோ. சவுரப் அவர்கள் வாழ்த்துதல்களை கல்வித்திட்டத்தின் ஆசிரியர்களுக்கும், வந்திருந்த தலைவர்களுக்கும் தெரிவித்தார். ஜாபுவாவிலுள்ள M.L.A. திரு. வீர்சிங் புரியா அவர்களின் வருகை 50 டீச்சர்களுக்கும், 5 திட்ட மேலாளர்களுக்கும் மற்றும் ஷாலோம் ஊழியர்களுக்கும் பெரிய உற்சாகத்தைக் கொடுத்தது. மேலும் இது ஒரு மறக்க முடியாத நிகழ்வாக அமைந்தது. இந்த திட்டத்தை பீல் ஜனங்களுக்காக ஆரம்பித்ததற்காக பாராட்டி பேசினார். மேலும் ஜனங்களை படிப்பிலும், கடின உழைப்பிலும் முன்னேற உற்சாகமூட்டினார். மேலும் இந்த முதியோர் கல்வித் திட்டம் சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்யும் என்று கூறினார். மேலும் இந்த திட்டத்திற்கு எந்தவிதத்தில் எதிர்ப்பு வந்தாலும் என்னுடைய முழு பாதுகாப்பு உண்டு என திரு. வீர்சிங் புரியா அவர்கள் உறுதியளித்தார்.

சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தினை விளக்கினார்கள். முன்னதாக இத்திட்டத்தில் பயின்று பயனடைந்த இரண்டு பேர் மேடையில் வந்து தாங்கள் பெற்ற பலனை பகிர்ந்து கொண்டனர். அதில் சகோ. கலியா டாமோர் அவர்கள் கூறியதாவது : நான் இந்தத் திட்டத்தின் மூலமாகத்தான் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொண்டேன். மேலும் நான் வேதம் வாசிப்பதும் இந்தத் திட்டத்தின் மூலம் கிடைத்த பலனாகும். இதற்காக ஆண்டவருக்கும் முதியோர் கல்வித் திட்டத்திற்கும் நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

இறுதியாக சகோ. பால் முனியா அவர்கள் இத்திட்டம் வெற்றியடையுவம், தமது ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக அமையவும், ஆசிரியர்களுக்கு ஞானத்தை தேவன் கொடுக்கவும் ஜெபித்து முடித்தார்.

இந்தத் திட்டத்தின் மூலம் 36.87% மட்டுமே படிப்பறிவு உள்ள ஜாபுவா (மத்தியப்பிரதேசம்) மாவட்டத்தில் படிப்பறிவு விகிதம் கணிசமாக உயரும் என்பதில் ஐயமில்லை. இதற்காக ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் சேவா பாரத் இயக்கத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கிறோம்.

# CBC (Children Bible Class - 2011)



ஒவ்வொரு ஆண்டும் நமது பணித்தளங்களில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கான இஆஇ நடத்தப்பட்டு வருகிறது.

- 2008ஆம் ஆண்டில் "இயேசுவே இரட்சகர்" என்றதலைப்பில் 17,000 சிறுவர்களும்
- 2009ஆம் ஆண்டில்"விசுவாசமே ஜெயம்" என்றதலைப்பில் 20000 சிறுவர்களும்,
- 2010ஆம் ஆண்டில் "நல்ல போதகர் இயேசு" என்றதலைப்பில் 25000 சிறுவர்களும்

பங்கு பெற்று இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பெற்றுக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதேபோல் இந்த ஆண்டும் வருகின்ற மே மாதம்

**"ஜீவ வார்த்தை"** என்கிற தலைப்பில் 30000 சிறுவர்களுக்கு 600 கிராமங்களில் CBC நடத்த ஜெபத்துடன் செயல்பட்டு வருகிறோம்.

## இதற்கான தேவைகள்:–

1. 600 ஆசிரியர்களுக்கான பயிற்சி கையேடுகள்

2. 30000 CBC புத்தகங்கள். 3. Badge. (30000)

4. பாட்டு புத்தகங்கள் (10,000) 5. கலர் பென்சில்கள், பேனாக்கள் (5000 Sets)

CBC புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்றபொருட்கள் வழங்கவும் ஒரு குழந்தைக்கு தலா **ரூ. 10/– வீதம் 30000 குழந்தைகளுக்கு ரூ. 3 இலட்சம்** தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். மேலும் உங்கள் குடும்பத்தின் சார்பிலோ, ஊழியத்தின் சார்பிலோ அல்லது சபையின் சார்பிலோ **ஒரு குழந்தைக்கு ரூ. 10/– வீதம்** உங்களால் முடிந்த அளவிலான குழந்தைகளுக்கு கொடுத்து இந்த சிறுவர் ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்.

தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!




CBC பயிற்சி புத்தகங்கள்



CBC ஆசிரியர் பயிற்சியில்

**"மிகவும் சிறியவராகிய..... இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்"** மத். 25:40

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை.

| நாள் | நேரம் |
| --- | --- |
| 09.04.2011, சனிக்கிழமை | மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

***யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.***

தொடர்புக்கு:– **சகோ. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

## *தேர்வு எழுதும் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கான*
## சிறப்பு பிரார்த்தனை

பத்தாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் நமது ஊழியர்கள் மற்றம் விசுவாசிகளின் பிள்ளைகளுக்கென்று விசேஷித்த ஜெபக் கூடுகைகள் ஒழுங்கு செய்யப்பட்டது.

ராஜஸ்தானிலுள்ள பிள்ளைகளுக்கு பிஜல்பூரில் வைத்து பிப்ரவரி 20ம் தேதி நடைபெற்றது. இதில் தேர்வு எழுதும் மாணவர்கள் கலந்து கொண்டனர். 27&28ம் தேதிகளில் குஜராத் மற்றும் மத்தியப்பிரதேசம் மாணவர்களுக்கென்று கூடுகை நடைபெற்றது. இதில் அனைத்து கூடுகைகளிலும் சேர்த்து மொத்தம் 600க்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்த கூடுகைகளில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் **“குதிரை யுத்த நாளுக்கென்று ஆயத்தப்படுத்தப்படும், ஜெயமோ கர்த்தரால் வரும்”** என்ற வசனத்தைக் கொண்டு செய்தியளித்தார்கள். செய்தியின் மூலம் அநேகர் விசுவாசமடைந்து ஜெபம் செய்வோம்! ஜெயம் பெறுவோம் என்ற நம்பிக்கை அடைந்தார்கள். தேர்வு எவ்வாறு எழுத வேண்டும் என்ற ஆலோசனைகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. கூட்டங்களின் முடிவில் ஜெபித்து அனைத்து மாணவ மாணவிகளுக்கும் “பேனாக்கள்” வழங்கப்பட்டன.

# தேர்வு எழுதும் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கான சிறப்பு ஜெபம்



செய்தியளிக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ்



மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கும் – சகோ. ஜெய்னுசிங்



ஆடல், பாடலுடன் ஆராதனை



பதிவு செய்யும் மாணவர்கள்





மாணவ மாணவிகளுக்கான சிறப்பு ஜெபம் செய்யும் சகோதரி வஹிதா தேவதாஸ் & சகோ. டேனியல்



மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்ட உற்சாகப் பரிசுகள்



பங்கு பெற்ற மாணவிகளில் ஒரு பகுதி

# ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம்கள் 21-25.02.2011



பயிற்சியளிக்கும் Dr. Abel அவர்கள்



பயிற்சியளிக்கும் Dr. Inba அவர்கள்



பயிற்சியளிக்கும் Sis. Jolly Abel அவர்கள்



பயிற்சியளிக்கும் Sis. Vanaja அவர்கள்



பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ் அளிக்கப்படுகிறது



பயிற்சியைக் குறித்து பகிர்தல்



பயிற்சியில் கலந்து கொண்ட ஊழியர்கள் மற்றும் ஊழியர் மனைவிமார்கள்
& பயிற்சியளித்த Dr. Able, Dr. Inba, Dr. Sheju மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ்

# ஷாலோம் மருத்துவ முகாம் - 21-23.02.2011



சிகிச்சையளிக்கும் Dr. Inba அவர்கள்



சிகிச்சையளிக்கும் Dr. Abel அவர்கள்



சிகிச்சையளிக்கும் Dr. Sheju அவர்கள்



நோயாளிக்கு மருத்துவம் செய்யப்படுகிறது.



கையில் கட்டியுடன் சிகிச்சைக்காக காத்திருக்கும் சகோதரி



குழந்தையின் சிகிச்சைக்காக காத்திருக்கும் சகோதரி



நோயாளிகளுக்க வழங்கப்பட்ட மருந்து & மாத்திரைகள்



சிகிச்சைக்காக காத்திருந்த ஜனங்கள்

## சத்தியமங்கலத்தைச் சேர்ந்த Sis. லில்லி பிரேம் குமார், Sis. ஹெலன் ஜெபசிங் ஷாலோம் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த சகோ. ஜெயபால் ஆகியோரின் பணித்தள வருகை



ஹிரோலா கிராம ஆலய பார்வை



அந்தர்வேலியா கிராம ஆலயத்தில் பகிர்வு வேளை



ஊழியர் மனைவிமார் கூடுகையில்



சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களுடன்



பாரேவா கிராம ஆலயத்தில் சிறப்பு பாடல்



வில் அம்புகளுடன் சகோதரிகள்

## முதியோர் கல்வித்திட்டத்திற்கான தொடக்க விழா 12.03.2011




மெழுகுவர்த்தியெற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ்



ALP குழுவினர்

# பணித்தள பார்வை

கர்த்தருடைய பெரிதான கிருபையால், பவானிசாகர் ஹோலி டேபர்நேக்கிள் திருச்சபையிலிருந்து சகோதரி. லில்லி பிரேம் குமார், சத்தியமங்கலம் ஷாலோம் பிரதிநிதி அவர்களின் மனைவி சகோதரி. ஹெலன் ஜெபசிங் மற்றும் தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் சகோ. ஜெயபால் ஆகிய மூன்று பேருமாக ஷாலோம் பணித்தளத்திற்கு சென்றிருந்தோம். மூன்று பேரும் மார்ச் மாதம் 1–ம் தேதி முதல் 4–ம் தேதி வரை ஷாலோம் பணித்தளங்களை பார்வையிட்டோம்.

தாகோத் தலைமை அலுவலகத்தில் பணிபுரிபவர்களும், சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களும் அன்புடன் வரவேற்று நன்றாக உபசரித்தார்கள். நான்கு நாட்களும் அவர்கள் காட்டிய அன்பு அன்பு பகிர்வு இயக்கம் என்று பெயருக்கு ஏற்ப அமைந்திருந்தது. ஷாலோம் ஊழியத்தில் இருக்கும் அனைவரும் தேவ அன்பினால் கட்டப்பட்டிருப்பதை அங்கு காண முடிந்தது.

28.02.11 அன்று இரவு 10.30 மணிக்கு தாகோத் (குஜராத்) பணித்தளத்தை அடைந்தோம். 01.03.2011–ல் 9.00 முதல் 9.30 மணிவரை நடைபெற்ற அலுவலக ஜெபக் கூடுகையில் பங்கு பெற்றோம். மாதத்தின் முதல் நாள் என்பதால் ஊழியர்களின் மனைவிமார் கூடுகை தாகோத் Training Centre-ல் வைத்து நடைபெற்றது. காலை 12.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற்ற கூட்டத்தில் சுமார் 100 பேர் கலந்து கொண்டார்கள். சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் நடத்தினார்கள். உபவாசத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி செய்தி கொடுக்கப்பட்டது. கூடுகையில் பரிசுத்த ஆவியானவரின் ஆட்கொள்ளுதலை அதிகமாக உணர முடிந்தது. பீல் மக்கள் யாவரும் ஆடிப்பாடி, ஆர்ப்பரித்து தேவனைத் துதித்து மகிழ்ந்தது பரலோகமே வந்து இறங்கியது போன்று இருந்தது. எல்லாரும் மெய் மறந்து தேவனை ஆராதித்தார்கள். ஒரு ஊழியருடைய மனைவி ஜெபித்த பொழுது செத்தவனை போல கிடந்த மனிதன் ஒருவனை கர்த்தருடைய வல்லமையால் உயிரோடு எழுப்பினாள் எனவும், அபிஷேகம், அந்நியபாஷை பெறாதவர்கள் பெற்றுக் கொண்டதாகவும், விபத்தில் அவர்களை தேவன் பாதுகாத்ததையும் சாட்சியாக கூறினார்கள்.மேலும் 2–மாதங்களுக்கு ஒரு முறை நடக்கும் 5 மணிநேர தொடர் துதி ஆராதனை மாலை 6.15 மணி முதல் இரவு 11.15 மணி வரை இடைவெளி இல்லாமல் நடைபெற்றது. ஒருவர் கூட சோர்ந்து போகாமல் உற்சாகத்துடன் தேவனை துதித்து ஆராதித்தனர்.

2–ம் தேதி குஜராத்திலுள்ள ஹிரோலா என்கிற கிராமத்தில் ஷாலோமின் முதல் ஆலயத்தை பார்வையிட்டோம். மேலும் Compassion - Shalom இணைந்து நடத்தும் சிறுவர் பாராமரிப்பு ஊழியத்தை பார்வையிட்டோம். வாக்கோல் சபை போதகரையும் சந்தித்தோம். அச்சபை ஆலயத்தையும் பார்வையிட்டோம். பிறகு பாரேவா என்ற இடத்திலுள்ள ஷாலோம் ஆலயத்தில் மூத்த மூப்பர்களின் மனைவிமார்களுக்கான கூட்டம் நடைபெற்றது. அந்த பகுதியிலுள்ள

மூப்பர்களின் மனைவிமார்கள் 150 பேர் கலந்து கொண்டார்கள். அந்த ஆலயத்தில் காலத்தை பிரயோஜனப்படுத்துங்கள் என்ற தலைப்பில் தெபொராளை குறித்து சகோ. லில்லி அவர்கள் தேவச் செய்தி கொடுத்தார்கள். அங்குள்ள போதகர் குடும்பம் மற்றும் மூப்பர்களுடைய மனைவிமார்கள் எங்களை அன்போடு ஏற்றுக்கொண்டு ஜெய் ஈசு என்று கூறி கை கொடுத்து வரவேற்றது மிகுந்த சந்தோஷமாக இருந்தது. விசுவாசிகள் உற்சாகத்துடன் காணப்பட்டார்கள். ஷாலோம் ஊழியர்களை ஆண்டவர் ஆசீர்வதித்திருக்கிறார் என்பதற்கு பாரேவா ஊழியர் சகோ. ஹவ்சிங் ஒரு மிகப் பெரிய சாட்சியாக இருக்கிறார்.

3ம் தேதி மத்தியபிரதேசத்திலுள்ள அந்தர்வேலியா என்ற பகுதிக்கு கடந்து சென்றோம். அந்தர் வேலியா போகும் வழியில் பல ஷாலோம் ஆலயங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. போகும் வழியில் ரூன்கேடாவில் ஒரு சிறு ஆலயத்தை பார்த்தோம். மேலும் ஜாபுவா என்னும் இடத்தில் மத்திய பிரதேசம் ஒருங்கிணைப்பாளர் Pr. பால் முனியா வீட்டிற்குச் சென்றிருந்தோம். அவரது துணைவியார் எங்களை நன்கு உபசரித்தார்கள்.

அந்தர் வேலியாவிலும் Shalom- Compassion Project நடைபெறுகிறது. அந்தர்வேலியா ஷாலோம் ஆலயத்தில் நடைபெற்ற மூப்பர் மனைவிமார் கூடுகையில் 200 பெண்கள் கலந்து கொண்டனர். சகோதரி. வஹிதா தேவதாஸ், சகோ. பிராங்கிளின் அவர்களும் இணைந்து ஆராதனை நடத்தினார்கள். சகோதரி. ஹெலன் ஜெபசிங் சந்தோஷம் அவர்கள் இயேசுவின் தாயார் மரியாளைக் குறித்து தேவ செய்தி அளித்தார்கள்.

இராஜஸ்தானில் உள்ள பீல் மக்கள் மத்தியிலும் ஆண்டவர் அற்புதமான ஆத்தும அறுவடையை தந்திருப்பதை எண்ணி துதிக்கிறோம். பிஜல்பூர் பகுதியில் ஷாலோம் மிஷன் தனித்து நடத்தும் Hostel லை பார்வையிட்டோம். விடுதியில் 190 பிள்ளைகளும், வீடுகளிலிருந்து வந்து 100 பிள்ளைகளும் கல்வி பயிலுகின்றனர். நல்ல முறையில் கல்வியும், உணவும் அளிக்கப்படுகிறது. சகோதரி. லில்லி அவர்கள் அங்குள்ள எல்லா பிள்ளைகளுக்கும் பிஸ்கட் பாக்கெட் வழங்கினார்கள். பிறகு பேடவ் என்ற இடத்திலுள்ள ஷாலோம் ஆலயத்தில் அப்பகுதி ஷாலோம் பெண்களுக்கான கூடுகை நடைபெற்றது. இந்த கூடுகையில், சகோதரி லில்லி பிரேம் குமார் குணசாலி யார் என்ற தலைப்பில் செய்தி கொடுத்தார்கள். மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. பேடவ் பகுதி ஊழியர் மிகவும் சாபத்தின் கட்டிலிருந்து மீண்டும் எவ்வாறு ஆண்டவருக்குள் வந்து, இப்பொழுது மிகப்பெரிய ஊழியர் சகோ. பாதர் டோடியார் போதகராக ஆசீர்வாதமாக இருக்கிறார் என்பதைப் பார்க்கும் போது இராஜஸ்தானிலும் ஷாலோம் ஊழியத்தின் மூலம் ஆண்டவர் பெரிய கிரியைகளை செய்திருக்கிறதை எண்ணித் துதித்தோம். அநேகர் தங்களது நன்மைகளை தேவனுக்காக சாட்சி பகர்ந்தார்கள். தொண்டையில் உள்ள கட்டி சுகமானது, கை, கால் இடுப்பு வலி, வலிப்பு நோய் சுகமானதைச் சாட்சியாக மூப்பர்களின் மனைவிமார்கள் கூறினார்கள்.

அதிக தேவைகளோடு இருக்கும் இந்த பணித்தளங்களுக்காக ஜெபிக்க கடமைப்பட்டிருக்கிறோம். இந்த ஷாலோம் ஊழியத்தின் தேவைகள் அதிகம். இன்னும் சொந்த இடங்கள் வாங்க உதவி செய்ய வேண்டுமே என்ற பாரம் எங்களுக்குள் உண்டானது. அநேக ஷாலோம் ஆலயங்களை எங்களுக்கு சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களும் ஷாலோம் ஊழியர்களும் காண்பித்த பொழுது மிகுந்த சந்தோஷமாக இருந்தது.

கிறிஸ்துவை அறியாத மக்கள் மத்தியில், அவர்களுடைய பாஷையைக் கற்று, ஆலயங்களை எழுப்பவது என்பது சாதரண காரியமல்ல. அன்பு அண்ணனையும், அக்காவையும் தைரியமுள்ள ஊழியர்களாக உண்மையாகவே தேவன் தமக்கென்று எழுப்பி இருப்பதை பார்க்கும் பொழுது அது பீல் மக்கள் பெற்று கொண்ட பாக்கியம் என கருதுகிறோம். கரடுமுரடான பாதைகளில் சென்று முரட்டு ஜனங்கள் மத்தியில் அநேக பாடுகளின் வழியாக ஊழியங்கள் செய்து, இயேசுவை சிறிது கூட கேள்விப் படாத இடங்களில் கிறிஸ்துவுக்காக 450க்கும் அதிகமான ஊழியர்களை எழுப்பி இருப்பது தேவன் கொடுத்த சுத்த கிருபையே. சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் எல்லா ஊழியப் பெண்களுக்கும் ஒரு முன் மாதிரியாக செயல்படுகிறார். அவர்களது செயல்பாடுகளைக் கவனித்து, நாமும் அதுபோல பரிசுத்த ஆவியானவரால் நிரப்பட்டவர்களாய் செயல்படும்போது, பெரிய அறுவடையைக் காணமுடியும். ஷாலோம் ஊழியர்கள் ஒவ்வொருவரையும் ஆண்டவர் ஆசீர்வதித்திருக்கிறார். ஷாலோம் என்றாலே ஆசீர்வாத ஊழியம் என்பது போல் இருக்கிறது.

ஷாலோம் Project, Hostel ஆலயம் அனைத்தையும் பார்த்த பொழுது ஒரு மிகச் சிறந்த ஊழியத்தில் பங்கு பெற்றிருப்பதை எண்ணி நாங்கள் மகிழ்ந்தோம். மேலும் நல்ல நிலத்தில் தான் நமது விதைகளை விதைக்கிறோம் என்ற திருப்தி எங்களுக்கு ஏற்பட்டது. அது மாத்திரமல்ல இன்னும் ஷாலோம் பங்காளர்களை உருவாக்க வேண்டும், முழுத் தேவையும் சந்திக்கப்படும் அளவு கொடுக்க வேண்டும் என்ற பாரமும் உருவாகியது. மிகுந்த சந்தோஷத்துடனும் மன நிறைவுடனும் பணித்தளத்திலிருந்து திரும்பி வந்தோம். அனைத்தையும் நேர்த்தியாய் செய்கிற எல்லாம் வல்ல தேவன் இயேசு கிறிஸ்துவுக்கே மகிமையை செலுத்துகிறோம் ஆமென்.

**சகோதரி. லில்லி பிரேம் குமார்,**
**சகோதரி. ஹெலன் ஜெபசிங் சந்தோஷம்,**
(சத்தியமங்கலம்)
**சகோதரர். ஜெயபால்.** (ஷாலோம் தலைமை அலுவலகம்)

# ஆரம்ப சுகாதார பயிற்சி

பிப்ரவரி 21ம் தேதி முதல் 25ம் தேதி வரை 45 சுதேச ஊழியர்களுக்கும் 75 சுதேச ஊழியர்களின் மனைவிமார்ருக்கும் ஆரம்ப சுகாதார பயிற்சி அளிக்கப்பட்டது.

தமிழகத்திலிருந்து Dr. Abel Rajrathanam, Dr.Jolly Rajarathnam, Dr. Inba Kumar, Mrs. Shanthi Jeevan, Miss. Vanaja ஆகியோர் நமது பணித்தளத்திற்கு வருகை தந்து இந்த பயிற்சியை நடத்தித் தந்தார்கள்.

இந்த பயிற்சியின் போது திரைப்படம் வழியாக உடலின் உள் பாகங்களையும் அவற்றின் செயல்பாடுகளையும் குறித்து Dr. Abel Rajrathanam அவர்கள் மிகவும் தெளிவாக விளக்கிக் கூறினார்கள். Dr.Jolly Rajarathnam அவர்கள் வேத வசனத்தின் வழியாக சுகாதாரத்தின் மகத்துவத்தை, விளக்கினார்கள். மேலும் அரசாங்கத்தில் எவ்வளவு மருத்துவ வசதிகள் உள்ளன என்பதை Mrs. Shanthi Jeevan & Dr. Jolly அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

இந்தப் பயிற்சியில் முக்கியமாக கர்ப்பிணி பெண்களுக்கு எந்தவிதமான ஊசிகள், தடுப்பூசிகள் எந்த மாதத்தில் போட வேண்டும் என்பதை தெளிவாக கூறப்பட்டது. மேலும் பிரசவம் கண்டிப்பாக மருத்துவமனையில்தான் பார்க்க வேண்டும் என்பதையும், வீட்டில் பார்ப்பதனால் எவ்வளவு ஆபத்து என்பதையும் தெளிவுபடுத்தினர். பீல் மக்கள் மத்தியில் குழந்தை பிறந்தபின் 3 நாள் வரை ஆட்டுப்பால் அல்லது மாட்டுப்பால்தான் குழந்தைக்குக் கொடுப்பார்கள். இந்த பயிற்சியில் தாய்ப்பாலின் முக்கியத்துவத்தைக் குறித்து மேலும் குழந்தை பிறந்த அரை மணி நேரத்திற்குள்ளாக தாய்ப்பால் கொடுக்க வேண்டும் என்பது குறித்தும் மருத்துவர்கள் கூறினார்கள். ஐ.நா. சபை அறிக்கையின்படி, இந்தியாவிலேயே ஜாபுவா மாவட்டத்தில்தான் குழந்தை இறப்பு விகிதம் மிகவும் அதிகமாக உள்ளது. இந்த பயிற்சியின் மூலம் தேவன் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வருவார் என்று விசுவாசிக்கிறோம்.

மேலும் உணவின் முக்கியத்துவம், எந்த உணவில் எந்தவிதமான சத்துப் பொருடக்ள் உள்ளன என்பதையும், இந்த உணவினை சரியான அளவில் சாப்பிடவில்லையென்றால் குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் எந்தவித பாதிப்புகள் ஏற்படும் என்பதை வந்திருந்த மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் தெளிவாக அறிவுறுத்தினார்கள்.

நோய் பரவாமல் எப்படி தடுக்க வேண்டும் என்பதையும் மிகவும் தெளிவாக எடுத்துரைத்தனர். ராஜஸ்தானிலிருந்து வந்திருந்த திரு. வில்லியம் டாமோர் அவர்கள் இவ்வாறாக கூறினார்: இந்த பயிற்சியின் மூலம் நோய்கள் வராமல் எப்படி தடை செய்ய முடியும் என்பதை மிகவும் தெளிவாக கற்றுக் கொண்மோம். என் சரீரத்தில் எந்த பாகம் எங்கு உள்ளது. அந்த என்ன வேலையை செய்கிறது என்பதை அறிந்து கொண்டது எனக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது. மேலும் தாய்ப்பாலின் முக்கியத்துவத்தையும், தனி நபரின் சுத்தத்தின் மகத்துவத்தையும் எங்கள் சபையிலுள்ள ஜனங்களுக்கு நான் எடுத்துரைப்பேன் திருமதி. தல்லு கராசியா அவர்கள் கூறினார்.

## பீல் ஆதிவாசி மக்களுக்கு மருத்துவ முகாம்கள்

பிப்ரவரி 21, 22, & 23 ஆகிய தேதிகளில் குஜராத், தாகோத்திலுள்ள ஷாலோம் பயிற்சிக் கூடத்தில் வைத்து பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த மருத்துவ முகாமை Dr. Abel Rajrathanam, Dr.Jolly Rajarathnam, Dr. Inba Kumar, Dr. Sheji, Mrs. Shanthi Jeevan, Miss. Vanaja ஆகியோர் நடத்தித் தந்தார்கள். மருத்துவர்களுக்கும் நோயாளிகளுக்கும் இடையில் மொழி பெயர்ப்பாளர்களாக Mr. Wallace Sinai, Mrs. Beulah David, Mrs. Santra Jeyaraj & Mr. Garret Devadassan ஆகியோர் செயல்பட்டனர். Mr. Sunial அவர்கள் மருந்து கொடுப்பதில் உதவினார். ஒவ்வொரு நாளும் 200க்கும் அதிகமான நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்று பயனடைந்தனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## நமது பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு கல்விச் சுற்றுலா

தேவனுடைய அளவற்ற அன்பினால் Compassion India மூலம் 600க்கும் அதிகமான சிறுவர்கள் தாங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இவற்றுள் ஜெரி திட்டத்திலுள்ள சிறுவர்கள் கல்வி சுற்றுலாவிற்காக பரோடாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இந்த சுற்றுலாவைக் குறித்து சிறுவர்கள் கூறுவது....

காலை 6 மணிக்கு 60 சிறுவர்கள், 15 பெரியவர்களோடு பேருந்து புறப்பட்டது. தேவனை துதிக்கும் துதியோடு புறப்பட்டு வழியில் சிற்றுண்டியை முடித்து 10 மணிக்கு வடோதரா போய் சேர்ந்தோம். முதலாவது மீன் கண்காட்சியை பார்த்தோம். பல வகையான மீன்களைப் பார்த்து இறைவனுடைய படைப்பின் மகிமையை எங்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது. இதனைத் தொடர்ந்து உயிரியல் பூங்காவிற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு வகை வகையான பறவைகளும், மிருகங்களும் எங்களது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. வெள்ளை மயிலும், சாம்பல் நிற கிளியும், சிங்கமும் எங்களை மிகவும் கவர்ந்தது. ஆசிரியர்கள் ஒவ்வொரு வகை மிருகங்களைப் பற்றியும் விளக்கிச் சொன்னார்கள். இதனைத் தொடர்ந்து உயர்தர ஓட்டலில் எங்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

மதிய உணவிற்கு பின்பு பேருந்து ஆஜ்வா கிராமத்தில் அமைந்துள்ள பூங்காவை நோக்கி புறப்பட்டது. பூங்காவை அடைந்ததும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் தலைமையில் வேதாகம அடிப்படையில் விளையாட்டு நடத்தப்பட்டது. (பொருட்களை கண்டுபிடித்தல், எண்களை சேர்த்தல் ஆகியவை எங்களை மிகவும் உற்சாகப்படுத்தியது). தொடர்ந்து எங்களுக்கு Action Songs கற்றுத்தரப்பட்டு, ஜெபத்தில் வழிநடத்தப்பட்டோம். இறுதியாக Musical Fountain பார்க்க அழைத்துச் செல்லப்பட்டோம். அதன்பின் ஜெபத்துடன் ஜெரி மாணவர் விடுதிக்கு இரவு 12 மணி அளவில் வந்து சேர்ந்தோம். இந்த ஏற்பாடுகளை Project Co-ordinator Bro. திவா அவர்கள் செய்தார்கள். எங்களது வாழ்க்கையில் கல்விச் சுற்றுலா செல்வது இது முதல் முறையாகும். இந்த சுற்றுலாவிற்காக தேவனுக்கு மகிமையை செலுத்துகிறோம்.

## ஷாலோம் ஜெபக் கூடுகைகள்

தேவனுடைய பெரிதான கிருபையாலும் இரக்கத்தாலும் நமது ஷாலோம் ஜெபக் கூடுகைகள் நமது ஷாலோம் ஆதரவாளர்களின் இல்லங்களில் நடைபெற்று வருகிறது. இறுதி நாட்களில் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட ஜெபம் மிகவும் அவசியம், எனவே தேவனுடைய திட்டத்தின்படி இந்த நாட்களில் ஜெபக்கூடுகைகள் **ஒவ்வொரு மாதம்** நடைபெற்று வருகின்றன. இந்தக் கூடுகைகளில் தேசத்திற்காய், ஊழியங்களுக்காய், ஊழியர்களுக்காய், குடும்பங்களுக்காய், ஜெபித்து வருகிறோம். தற்பொழுது நடைபெற்றுவரும் ஜெபக் கூடுகைகளின் விபரங்களை கீழே கொடுத்துள்ளோம்.

மேலும் உங்கள் இல்லங்களிலும், உங்கள் பகுதிகளிலும் ஜெபக்கூடுகைகள் நடத்த நீங்கள் விரும்பினால் நமது ஷாலோம் ஊழியர் **சகோ. ரதிஸ்குமார்** அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு ஆலோசனைகளையும், ஜெபக்குறிப்புகளையும் வழங்குகிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய ***செல் : 9600695598***

| ***ஏப்ரல் மாதம் ஜெபக்கூடுகைகள் நடைபெறும் விபரங்கள்*** | | | |
|---|---|---|---|
| தேதி | நாள் | நேரம் | இடம் / தொடர்பு |
| 01.04.2011 | முதல் வெள்ளி | மாலை 7 மணி | **சகோ. பாஸ்கர்,** 23-A. பிள்ளையார்கோவில் தெரு, ஸ்டேட் பேங்க் காலனி, தூத்துக்குடி – 8. செல் : 99940–25696 |
| 02.04.2011 | முதல் சனி | காலை 9.30 மணி | **Sharing Love Mission** தலைமை அலுவலகம், 5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9345675468 |
| 16.04.2011 | மூன்றாம் சனி | மாலை 6 மணி | **சகோ. ஜெயக்குமார்,** 2/328, 5 வது தெரு (Extn.) P&T காலனி, தூத்துக்குடி – 8. செல் : 9843379994 |
| 27.04.2011 | கடைசி புதன் | மாலை 7 மணி | **சகோ. சாமுவேல் ஜெயராஜ்,** 48, அண்ணாநகர் 10வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9789569737 |

"ùUnVôLúY AYo SmØûPV TôÓLû[ HtßdùLô i Ó,
SmØûPV ÕdLeLû[f ÑUkRôo."

ஏசாயா 53 : 4

# Àp B§Yô£ UôQYo பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **ஏலம் டின்டோர்** |
| தந்தையின் பெயர் | : | ரமேஷ் டின்டோர் |
| பிறந்த நாள் | : | 29.05.2003 |
| படிக்கும் வகுப்பு | : | 2nd Std., |
| சொந்த ஊர் | : | சிமல்கேடா |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |

**மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

இவரது தந்தை தேவனை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய குடும்பத்தில் சமாதானமின்றி காணப்பட்டார்கள். ஷாலோம் ஊழியத்தை குறித்து கேள்விப்பட்டு ஊழியரிடம் சென்று ஜெபித்தார். ஜெபித்தபோது தேவன் இவருடைய குடும்பத்தை சமாதானத்தினால் நிரப்பினார். இதன் மூலம் இவருடைய குடும்பத்தார் அனைவரும் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். ஊழிய அழைப்பை பெற்று தன் சொந்த கிராமமான சிமல்கேடாவில் ஊழியம் செய்து வருகிறார். இவர் மூலம் அநேகர் இயேசுவை ஏற்றுக்கொண்டு சபைக்கு வருகிறார்கள். தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:–**

நன்றாக படிப்பான். நன்றாக விளையாடுவான்.

**ஜெபியுங்கள்:–**

நன்றாக படிக்க தேவன் ஞானத்தை கொடுக்கவும், இவனுடைய பெற்றோர் செய்கிற ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**மாணவியைத் தாங்குபவர் :– K.T.R. Enterprises,** Thiruvallur

**இந்த மாணவரைப் போல 243 மாணவ மாணவியருக்கு மாதந்தோறும் ரூ. 500/– கொடுத்து ஜெபித்துத் தாங்கக் கூடிய ஆதரவாளர்கள் தேவை.**

# கடந்த மாத பணித்தள அறிக்கை

**சுதேச ஊழியர் கூடுகை**

குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களிலும் உள்ள சுதேச ஊழியர்களின் கூடுகை மார்ச் மாதம் நடைபெற்றது. 3ம் தேதி குஜராத் ஊழியர்களுக்கும், 5ம் தேதி மத்தியப்பிரதேசம் ஊழியர்களுக்கும், 8ம் தேதி மற்றும் 10ம் தேதி இராஜஸ்தான் ஊழியர்களுக்கும் நடைபெற்றன. இதில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் செய்தியளித்தார்கள். உபவாசத்தைக் குறித்து அவர்கள் அளித்த செய்தி மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. மேலும் தானியேலின் ஜெப வாழ்க்கை ஊழியர்களுக்கு பிரயோஜனமாக இருந்தது. அனைத்து ஊழியர்களும் தங்கள் சொந்த மக்கள் இரட்சிக்கப்பட ஜெபிக்க வேண்டும் என்கிற பாரத்துடன் கடந்து சென்றனர். தேவன் பங்கு பெற்ற ஒவ்வொருவரையும் பரிசுத்த ஆவியானலும் ஜெப ஆவியினாலும் நிரப்பினார்.

**சுதேச ஊழியர்களின் மனைவிமார் கூடுகை**

கடந்த பிப்ரவரி 14ம் தேதி இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள கோய்க்கா பகுதி ஊழியர்களின் மனைவிமாருக்கான சிறப்புக் கூடுகை நடைபெறறது. பிப்ரவரி 15ம் தேதி ஹஜ்மால் பகுதி ஊழியர்களின் மனைவிமாருக்கான சிறப்புக் கூடுகை நடைபெறறது. இந்தக் கூடுகைகளில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள **“யெகோவா நிசி”** என்ற தலைப்பில் செய்தியளித்தார்கள். சூழ்நிலைகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் நம்முடைய தேவன் நமக்கு ஜெயம் தருகிறவராய், வெற்றிக் கொடியேற்றுகிறவராய் நமக்கு முன் செல்கிறார் என்ற விசுவாசத்தோடும், தைரியத்தோடும் கடந்து சென்றனர். பங்கு பெற்ற ஒவ்வொருவரையும் தேவன் அக்கினி அபிஷேகத்தினால் நிரப்பினார். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

அதேபோல் மார்ச் 1ம் தேதி மூத்த சுதேச ஊழியர்களின் மனைவிமார்களுக்கான சிறப்புக் கூடுகை குஜராத், தாகோத் பயிற்சிக் கூடத்தில் நடைபெற்றது. ஆராதனை வேளையில் தேவனுடைய அபிஷேகமும் பிரசன்னமும் அளவில்லாமல் இறங்கி வந்தது. சாட்சி நேரத்தில் ஒரு ஊழியரின் மனைவி தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபித்தபோது, மரித்த சடலத்தை தேவன் உயிரோடு எழுப்பினார் என்று சாட்சி கூறினார். ஆதி அப்போஸ்தலர் காலத்தில் நடைபெற்றது போல இன்னும் தேவன் நம்முடைய பீல் ஊழியர்களைக் கொண்டு அற்புதம் செய்து வருகிறார். தேவனுக்கே மகிமை! ஜெபவேளையில் அனைவரும் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டாரக்ள்.

**சுதேச ஊழியர்களின் மனைவிமார் கூடுகை**

பிப்ரவரி 17 & 18 தேதிகளில் தாகோத் எரியாவில் உள்ள அனைத்து சபைகளிலுமுள்ள மூப்பர்களின் மனைவி மார் கூட்டம் தாகோத் பயிற்சி கூடத்தில் நடைபெற்றது. இதில் மொத்தம் 325 பெண்கள் கலந்து கொண்டனர். ஆராதனையின்போது கர்த்தருடைய வல்லமை மற்றும் அபிஷேகம் இறங்கி வந்தது. ஆராதனையின் போது அனைவரும் களிகூர்ந்து மகிழ்ந்தார்கள். கூடுகையில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் செய்தியளித்தார்கள். அதேபோல் மார்ச் 2ம் தேதி ஜாலோத் ஏரியாவிலுள்ள மூப்பர் மனைவிமார்களுக்கு பாரேவா கிராம சபையில் வைத்து கூடுகை நடைபெற்றது. இதில் மொத்தம் 118 பெண்கள் கலந்து கொண்டனர். பணித்தளைத்தைப் பார்வையிட வந்திருந்த, சத்தியமங்கலத்தைச் சேர்ந்த சகோதரிகள் லில்லி பிரேம் குமார், ஹெலன் ஜெபசிங் சந்தோஷம் மற்றும் ஷாலேம் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த சகோ. ஜெயபால் ஆகியோர் இந்த கூடுகையை பார்வையிட்டனர். இதில் சகோதரி லில்லி பிரேம் குமார் அவர்கள் தேவ செய்தியை வழங்கினார்கள்.

இதே போல் மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியா கிராம பகுதியிலுளள் பெண்களுக்கு மார்ச் 3ம் தேதி கூடுகை நடைபெற்றது. இந்தக் கூடுகையில் சகோதரி ஹெலன் ஜெபசிங் சந்தோசம் அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். மொத்தம் 187 பெண்கள் கலந்து கொண்டனர். 4ம் தேதி ராஜஸ்தான் பேடவ் கிராம சபையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த பெண்களுக்கு கூடுகை நடைபெற்றது. இதில் சகோதரி லில்லி பிரேம்குமார் அவர்கள் செய்தியளித்தார்கள். மொத்தம் 62 பெண்கள் கலந்து கொண்டனர்.

இதே போல் குஜராத், ஜாலோத் பகுதியில் உள்ள பெண்களுக்கு காமடி கிராம சபையில் வைத்து 7ம் தேதியும், சோட்டா உதய்பூர் பகுதியிலுள்ள பெண்களுக்கு 11ம் தேதியும் கூட்டம் நடைபெற்றது. இதில் மொத்தம் 204 பெண்கள் கலந்து கொண்டனர். இந்த கூட்டங்களில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் "கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்" என்ற வசனத்தைக் கொண்டு செய்தியளித்தார்கள். இந்த செய்தி அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது. இந்த பெண்கள் கூட்டங்களில் தேவன் அநேகருக்கு விடுதலை கொடுத்தார். மேலும் அநேக அற்புதங்களை நடத்தினார். அநேகர் சுகம் பெற்று திரும்பினார். கர்த்தருக்கே மகிமை!

**துதி ஆராதனை, அந்நியபாஷை ஜெபம் & முழு இரவு ஜெபம்**

பிப்ரவரி மாதம் 25ம் தேதி குஜராத் பணித்தள அவலுவலக பெண்கள் கூடி மூன்று

மாநிலத்திலுள்ள பீல் மக்களின் இரட்சிப்பிற்காக முழு இரவு ஜெபம் செய்தார்கள். இதில் ஒவ்வொரு கிராமத்தின் பெயரும், தாலுகாக்களின் பெயர்களும், ஊழியர்களின் பெயர்களும் சொல்லி விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தை சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் நடத்தி செய்தியளித்தார்கள்.

மூன்று மாநிலங்களிலுமுள்ள மூத்த சுதேச ஊழீயர்களின் மனைவிமார்கள் கூடி 5 மணிநேர தொடர் துதி ஆராதனையில் பங்கு பெற்றார்கள். அனைவரும் உற்சாகத்தோடும், சந்தோஷத்தோடும் தேவனை ஆடிப்பாடி, நடனமாடி முழு உள்ளத்தோடு ஆராதனை செய்தார்கள். கர்த்தருடைய வல்லமை உள்ள பிரசன்னம் இறங்கி வந்தது.

மார்ச் மாதம் 6ம் தேதி குஜராத் பணித்த அவலுவலக பெண்கள் கூடி 3 மணிநேரம் அந்நிய பாஷையில் ஜெபம் செய்தார்கள். இதில் பரிசுத்த ஆவியானவர் பலத்த காற்றைப் போல இறங்கி வந்தார். அநேகர் தரிசனங்களைப் பார்த்தார்கள். ஊழியத்தின் காரியங்களை தேவன் வெளிப்படுத்தினார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

**<u>40 நாள் உபவாச ஜெபம் ஆரம்பம்</u>**

லெந்து நாட்களில் ஏறெடுக்கப்படும் 40 நாள் உபவாச ஜெபத்தை, நமது ஷாலோம் ஊழியர்கள், மற்றும் விசுவாசிகள் குடும்பமாக மார்ச் 15ம் தேதி ஆரம்பித்துள்ளனர். இதன் ஆரம்பமாக, 24 மணிநேர தொடர் உபவாச ஜெபம் அனைத்து ஷாலோம் சபைகளிலும் பணித்தள அலுவலகத்திலும் நடத்தப்பட்டது. இதில் விசவாசிகள் மூப்பர்கள் அநேகர் உற்சாகத்தோடு கலந்து கொண்டு உபவாசித்தனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

---

## இணையதளத்தில் நமது
## அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர்



*பிரியமானவர்களே,*

நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இந்த **"அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்"** இதழை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**web address : http://www.shalommission.in**

# ஜசக் வாட்ஸ்

***மிஷனெரி முன்னோடிகள்***



**ஜாண் அண்டர்சன்,** மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். பெலவீன சரீரமுடையவர். தந்தையோ கண் தெரியாதவர். எனினும் 21 வயதில் எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் புராண இயல் மற்றும் இறையியலில் சிறந்த மாணவனானார். புகழ் பெற்ற தாமஸ் சால்மர் என்பவர் அண்டர்சன் மீது அன்பு செலுத்தி அவரை சிறப்பான மாணவனாக உருவாக உதவினார். 18–ம் நூற்றாண்டில் ஆவியானவரின் தொடுதலால், ஏராளமான அயல் நாட்டு மிஷனெரிகள் பாரத மண்ணில் கால் பதித்து சாதனை படைத்தனர். சீகன்பால்க் போன்றோர் தரங்கம் பாடி வந்து ஆரம்பப் பாடசாலை நிறுவி சிறுவர், சிறுமியர் கல்வி பயில அகக்கண்களை திறந்தனர். 19–ம் நூற்றாண்டில் தொடர்ந்து வந்த மிஷனெரிகள் கல்வி அறிவில்லா இந்தியர்களுக்கு உதவ பாடசாலைகள், மேற்படிப்பிற்கான கல்லூரிகளையும் நிறுவினர்.

1830–ல் ஸ்காட்லாண்டு திருச்சபை மூலம் அனுப்பப்பட்ட மிஷனெரி அலெக்சாண்டர் டப் கல்கத்தாவில், வில்லியம் கேரி உதவியுடன் ஒரு ஆங்கிலக் கல்லூரியை நிறுவினார். இவர் இந்தியர்களின் கல்வித் தேவையை கூறி இன்னும் அதிகமான மிஷனெரிகள் அவசியம் தேவை என்று கூறி கல்லாமையை நீக்க வேண்டும் என்று உரைத்தார். திருச்சபைத் தலைவர்கள் அதை கண்ணீரோடு ஏற்றுக் கொண்டதுமல்லாமல் அவருடைய உரையை 20,000 பிரதிகள் அச்சிட்டு சபைகளுக்கு அனுப்பினார். இதன் பிரதி ஒன்று ஜாண் அண்டர்சன் கரத்தில் கிடைத்தது. அதை தேவ அழைப்பாக ஏற்று 1836–ல் கல்கத்தா வந்தார்.

பிப்ரவரி 12–ம் நாள் 1837–ம் ஆண்டு சென்னை வந்தார். ஒரு வாடகை கட்டிடத்தில் ஸ்காட்லாண்டு திருச்சபை சார்பாக ஒரு கல்விச்சாலையை சென்னையில் ஏப்ரல் 3–ம் தேதி ஆரம்பித்தார். 1837–ல் தென்னிந்தியாவிற்கு ஸ்காட்லாண்டு திருச்சபை, கல்வித் தொண்டு செய்ய அனுப்பிய முதல் மிஷனெரி இவரே. இதன் விளைவாகவே இன்று சேத்பட்டிலுள்ள சென்னை கிறிஸ்தவ கல்லூரிய பள்ளி மற்றும் தாம்பரத்திலுள்ள சென்னை கிறிஸ்தவ கல்லூரியாகும். சென்னை உயர் நீதி மன்றத்திற்கு எதிரில் அவருடைய பெயரில் உள்ள ஆலயம் இன்றும் உள்ளது. ஜாண் அண்டர்சனுக்கு 1847–ல் உதவியாக வந்த ஜான் பிரைய்டு

என்பவர் எழுதிய உண்மையான நுகம் என்ற புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன. ஸ்காட்லாந்து தேசத்தில் பற்றிய எழுப்புதலைப் பற்றிக் கூறும் போது, வேதத்தின் அடிப்படையில் வாழக் கற்றுக் கொண்ட, அம்மாணவர்கள் உயிர் மீட்படைந்து, சாட்சியாக இருந்து, திருச்சபை போதகர்களாக விரும்பாமல், ஆவியானவரின் வழி நடத்தலோடு மீட்பரின் மகிமைக்காக எங்கு செல்லவும், என்ன செய்யவும் ஆயத்தம் என அர்ப்பணித்தனர்.

பண்டிதல் தாமஸ் சால்மர், பரிசுத்த அந்திரேயா பல்கலைக்கழக பேராசிரியராக பணியாற்றினார். இறையியல் துறைக்கு 1828–ல் தலைவரானார். ஒரு நாள் பண்டிதர் தாமஸ் சால்மர், ஜாண் அண்டர்சனின் பிரசங்கத்தைக் கேட்டு மிகவும் பாராட்டினார். அதில் இருந்த ஆழமான சத்தியங்கள், உணர்வு பூர்வமாக செய்தி வழங்குதல் அவரைக் கவர்ந்தது. மிஷனெரியாக நான் செல்ல ஆயத்தம் எனக் கூறியதும், உடனே ஸ்காட்லாண்டு திருச்சபை அவரை ஏற்றுக் கொண்டது. ஸ்காட்லாண்டு மிஷனெரி இதழ் ஒன்றில் அண்டர்சனைப் பற்றி குறிப்பிடுகையில் தகுதியான, படித்த இளைஞன், கரிசனை, பாரம், உற்சாகம் மற்றும் அர்ப்பணம் கொண்டவர் எனவும், **அலெக்சாண்டர் டப்** போன்று இவரும் ஒரு சாதனை படைத்தவர் எனவும் வருணித்திருந்தது.

1841–ம் ஆண்டு இராஜகோபால், வெங்கட் ராமைய்யா என்ற இரு இந்து மாணவர்கள் ஆண்டவரை ஏற்று திருமுழுக்குப் பெற அனைத்து உதவிகளையும் அண்டர்சன் செய்தமையால் பெரிய எதிர்ப்பு உருவானது. அது போராட்டமாக மாறி 400 பேர் இருந்த கல்விச்சாலையில் 70 பேரே வந்தனர். தனி மனிதன் சுயமாக சத்தியத்தை அறிந்து அதை ஏற்றுக் கொண்டால், அந்த உரிமையை யாருக்கும் மறக்கக் கூடாது. இது தேவனுடைய செயல் என்று நம்பினார். காவல் துறையினர் வந்து தலையிட்டனர். இந்த இளைஞர்கள் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்பதால் அவர்களை விட்டுவிட்டார்கள். சமுதாயத்தால் ஒடுக்கப்பட்ட மனுக்குலத்திற்கு, ஜாண் அண்டர்சன் இந்த மிக முக்கிய கல்வியினை மக்களுக்குக் கொடுக்க 1838–ல் காஞ்சிபுரத்திலும், 1840–ல் செங்கல்பட்டிலும், 1841–ல் திருவள்ளூரிலும், பெண்களுக்கு என ஒரு பள்ளியை இராயபுரத்தில் 1843–ல் ஆரம்பித்தார். 1841–ம் ஆண்டு ஜாண் பிரைட்டு உட் என்பவர் ஜாண் அண்டர்சனுக்கு உதவியாக வந்தார். இங்கிலாந்து தேசத்திலிருந்து கொண்டு வந்த உபகரணங்கள் மூலம் கல்விச்சாலையில் வேதியியல் ஆய்வுக் கூடத்தை நிறுவினார். இன்று இந்த பாடசாலைகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் திகழ்ந்து, சிறந்த கிறிஸ்தவ தலைவர்களையும் உருவாக்கி வருகின்றன.

ஜாண் அண்டர்சன் போன்ற உயர்ந்த இலட்சியத்துடன், தியாகத்துடன் வாழ்ந்து, கல்வி பணியின் மூலம், தேவனை அறியும் அறிவை இத்தேசத்து மக்கள் பெற்றுக்கொள்ள நாம் நம்மை அர்ப்பணிப்போமாக.

# காணிக்கை அனுப்பும் வழிகள்

⇨ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.

⇨ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.

⇨ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.

⇨ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.

⇨ வெளிநாட்டில் வசிப்பவர்கள் ''V. DEVADASS'' (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

---

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

---

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373
(IFS Code : UTIB0000105)

---

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799
(IFS Code : ICIC0006139)

ஜப்பானில் கடந்த 11ம் தேதி ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமியால் மியாகி மாநிலம், பியூகுஷிமா டைச்சி அணு உலைகளில் ரியாக்டர்களை குளிர்விக்கும் முறைகள் அடுத்தடுத்து செயல்படாமல் போயின. அதனால் வெப்பம் அதிகரித்து 3 அணு உலைகள் வெடித்துச் சிதறின. 4வது அணு உலை தீப்பிடித்து எரிந்தது. இந்த விபத்துக்களால் அணு உலையில் உள்ள யுரேனியம் மற்றும் புளூடோனியம் எரிபொருள்களிலிருந்து கதிர்வீச்சுக்கள் வெளியேறின. அணு உலைகளை குளிர்விக்க ஜப்பான் விஞ்ஞானிகள் எடுத்த முயற்சிகள் இதுவரை பயனளிக்கவில்லை. அதனால், உக்ரைனின் செர்னோபில் அணு உலை துயரம் நடந்தது போல பியூகுஷிமா அணு உலைகளும் ஜப்பானியர்கள் அதிகளவில் பலியாக காரணமாகிவிடுமோ என்ற அச்சம் நிலவுகிறது. கதிர்வீச்சை தடுக்க முடியாத நிலையில், கான்கிரீட் கலவை மூலம் அணு உலைகளை மண்ணில் புதைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

---

லிபியா நாட்டில் கடந்த 40 ஆண்டுகளாக சர்வாதிகார ஆட்சி நடத்தும் அதிபர் கடாபிக்கு எதிராக கடந்த ஒரு மாதமாக மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். உலக நாடுகளின் எச்சரிக்கையை மீறி போராட்டக்காரர்களின் மீது லிபிய அரசு போர் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தி கிளர்ச்சியை ஒடுக்கி வருகிறது. சொந்த நாட்டு மக்கள் மீது ராணுவத்தை பயன்படுத்தி கொன்று குவித்து வரும் அடக்கு முறையை உடனடியாக நிறுத்த உலக நாடுகள் ஐ.நா. சபை மூலம் வலியுறுத்தி வந்தன. ஆனால் தனக்கு எதிரான கிளர்ச்சியை அடக்குவதில் கடாபி உறுதியாக இருந்து வருகிறார்.

நன்றி : www.dinakaran.com


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**



## கிராம ஆலயம்

# புசியாவாட்

## இராஜஸ்தான்

புசியாவாட் கிராமம் இராஜஸ்தான் மாநிலத்தில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் உள்ளடங்கிய மிகவும் மலைப்பாங்கான, போக்கு வரத்து வசதியற்ற ஒரு கிராமமாகும்.

இங்கு வாழும் ஜனங்கள் மிகவும் முரட்டாட்டமானவர்களாகவும், மிகவும் பின்தங்கிய ஜனங்களாகவும் இருக்கின்றனர். இவர்கள் இருளிலும் அந்தகாரத்திலும் பில்லி சூனிய கட்டுகளிலும், பாவத்திலும் வாழ்ந்து வருகிறவர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்து வந்தவர்தான் சகோ. மோகன் காட். 1998 ம் வருடம் இவருடைய தாயாரின் உடல் நலக் குறைவினால் காரணமாக அதிகமாக செலவு செய்து, மருத்துவம் மற்றும் மந்திர கிரியைகள் செய்தார்கள். ஆனாலும் ஒன்றும் பலனளிக்கவில்லை. மிகவும் சோர்ந்து போன நிலையில் இருந்த இவரது குடும்பம் பிஜல்பூரில் ஊழியம் செய்துவந்த சகோ. நாத்து டின்டோரை குறித்து கேள்விப்பட்டு தனது தாயாருக்காக ஜெபிக்கும்படி அங்கு தனது தாயாரை அழைத்துச் சென்றார். இதே போல் மூன்று முறை ஊழியரிடம் சென்று ஜெபித்தபோது அவர்களுடைய விசுவாசத்தை தேவன் கனப்படுத்தி அவரது தாயாருக்கு அற்புதமான சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை !

இந்த அற்புதத்தைக் கண்ட சகோ. மோகன் காட் ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். அதன்பின் தேவன் இவரை ஊழியத்திற்கு அழைக்கவே முழுமையாக தன்னை ஒப்புக் கொடுத்து ஷாலோமில் இணைந்து 2001 ம் ஆண்டு ஊழியர்களுக்காக குறுகிய கால பயிற்சி முகாமில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்று வல்லமையாக ஊழியம் செய்து வருகிறார். தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியம் என உணர்ந்தவராய் தனது சொந்த நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாகத் தந்தார். அந்த இடத்தில் தேவ நாமம் மகிமைப்படும்படியாக அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த ஆலயத்தில் தற்போது சுமார் 40க்கும் அதிகமான குடும்பத்தார் தேவனை ஆராதித்து வருகின்றனர்.

இந்த கிராம ஆலயம் நாசரேத்தைச் சேர்ந்த Bro. Andrews Ragland அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுத்த நிதி உதவிகளின் மூலம் கட்டப்பட்டதாகும்.


**ரூ. 2 இலட்சம் அல்லது ரூ. 1 இலட்சம்**
**நிதி உதவி கொடுத்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**

# நமது ஷாலோம் ஊழியத்தின் வெளியீடுகள்!




**Gift Pack 3 CDs**

**Rs. 100/-**
**Only**







எழுப்புதல் VCD, அன்பு பகிர்வு கீதங்கள் ACD, Shalom Sings for Jesus VCD
இவை மூன்றும் Gift Pack ஆக ரூ. 100/–க்கு வழங்குகிறோம்.
(தபால் செலவு : ரூ. 30/–)

தபாலில் பெற : *Sharing Love Mission,*
5/168, Caldwell Colony 3rd Street, Tuticorin - 628 008. Cell : 9345675468